**மஹரகம நகர சபை**
**கொழும்பு மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஆகஸ்ட் 23 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 20 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, மஹரகம நகர சபையின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2014, 2015 ஆம் ஆண்டுகளுக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ரூபா 3,647,197 கூட்டுத் தொகையுடைய கணக்காய்வுக் கட்டணத்திற்கு இரு முறை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. நடப்பாண்டிற்கான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கு நிதியேற்பாடு செய்யப்படவில்லை.

#### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் 05 கணக்கீட்டு விடயங்கள் ரூபா 98,011,154 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றின்மை

வைப்புகள், முற்பணம், பெற வேண்டிய கணக்கீட்டு விடயங்கள் 14 இன் பெறுமதி ரூபா 107,277,500 ஆகும். இவற்றிற்குரிய எழுத்துமூல சான்றுகள் இன்மையால் இம்மீதிகளது பிழையற்ற தன்மையை உறுதி செய்ய முடியாதிருந்தது.

#### 1.3.4 தீர்த்து வைக்கப்படாத மீதிகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 32,352,659 ஆகும். இம்மீதியில் நெடுங்காலமாக அறவிடப்படாதிருக்கும் சேவையிலிருந்து விலகிய, இடமாற்றம் பெற்ற, மரணமடைந்த 56 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 550,386 மீதியிருந்தது. இதனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) கொடுப்பனவு மறுக்கப்படும் காசோலைகளை இனங்கண்டு அவற்றை மீண்டும் அறவிடுவதற்கு அல்லது மீண்டும் கடன்பட்டோரை உருவாக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது கொடுப்பனவு மறுக்கப்பட்ட முற்பணம் எனும் பெயரில் உள்ள கணக்கில் ரூபா 27,446 வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 கணக்குகளில் வெளிப்படுத்தப்படாமை

மீளாய்வாண்டின்போது நிறுவனம் வெளி நபர்களுக்கெதிராக 08 வழக்குகளைத் தொடுத்து அவற்றில் 03 இன் பொருட்டு ரூபா 43,380 அறவிட வேண்டியிருந்தபோதும், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தினது 165(ஈ) உப பிரிவு | நகர சபை ஒன்றினது நிர்வாக எல்லைக்குள் நிறுவப்பட்டுள்ள ஏதாவதொரு காணி ஏல விற்பனையாக ஒருவரால் அல்லது தரகர் ஒருவரால் பிரசித்த ஏல விற்பனை மூலமாகவோ அல்லது வேறு வழிகளிலோ விற்பனை செய்யப்படுமாயின், அவ்விற்பனைப் பெறுமதியின் 1 சதவீதத்திற்குச் சமமான வரி விற்பனையாளரால் சபைக்குச் செலுத்தப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் 12 காணி விற்பனைகள் மூலம் சபையால் அறவிடப்பட்டிருந்த தொகையில் வருவாய் பரிசோதகரால் மதிப்பிடப்பட்ட பெறுமதியின் 1 சதவீதமான ரூபா 4,489,621 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இம்மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் காணித்துண்டுகளில் உள்ளவாறான விற்பனை பெறுமதிக்குமிடையேயான வேறுபாட்டைக் கண்டறிந்து அவ்வேறுபாட்டை ஆராய்ந்து அதனை அறவிடுவதற்கான நடவடிக்கையை சபை மேற்கொள்ளவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நி.பி 133(1) (2) மற்றும் நி.பி 134(1), (2) மற்றும் (3) | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றக்கூடிய நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து இருக்கவில்லை. |

| | |
|---|---|
| நி.பி 188(2) | வைப்பிலிட்டுத் தேறாதிருக்கும் ஒரு காசோலையும் 03 காசுக் கட்டளைகளும் ரூபா 9,325 பெறுமதியைக் கொண்டிருந்தன. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| நி.பி 371 | பெறப்பட்ட முற்பணம் குறித்த பணி முடிவடைந்ததும் தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு 27 முதல் 356 நாட்கள் தாமதமாகியிருந்தது. |
| நி.பி 396 (ஈ) | வழங்கப்பட்டு, கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்த 49 காசோலைகளின் பெறுமதியாகிய ரூபா 162,909 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவிலும் கூடிய வருவாய் ரூபா 192,729,139 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவிலும் கூடிய வருவாய் ரூபா 88,994,545 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 103,734,594 ஆகும். ஏனைய வருவாயும் வருவாய்க்கான உதவி அதிகரிப்புமே இதற்கான பிரதான காரணிகளாகும்.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மூலதன வருவாய் மற்றும் செலவினம் என்பவற்றை சீராக்கல் செய்ததன் பின்னரான நிகர மிகை ரூபா 71,436,301 ஆகும். திரண்ட நிதியம் அதேயளவு அதிகரித்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருவாய் சாதகமற்ற 12.51 சதவீதத்திலிருந்து சாதகமான 41.34 சதவீதம் வரையிலும், செலவினமானது சாதகமற்ற 105.7 சதவீதத்திலிருந்து சாதகமான 35.7 சதவீதம் வரையிலுமாக வேறுபாடுகளுக்குள்ளாகியிருந்தன.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 607269 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,052,258 வரவு மீதி காணப்பட்டபோதும், வங்கி மீதியின் உறுதிப்படுத்தலுக்கமைய 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதியன்று இக்கணக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தமையால் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி எதுவும் இருக்கவில்லை. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியிலான காசு மீதி ரூபா 2,052,258 தவறுதலாக அதிகரித்துக் காட்டப்பட்டு அதன் பிரகாரம் இனங்காணப்படாத வரவு மீதி ரூபா 2,052,258 ஆகவும், இனங்காணப்படாத செலவு மீதி ரூபா 190,470 ஆகவும் உருமாறியிருந்தன.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாயைச் சேகரிப்பதிலான செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்கும் என செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளவாறான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை தொடர்பான பொழிப்புடனான தகவல்கள் வருமாறு

| வருவாய்க்கான விடயம் | 2016 | | | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | உள்ளவாறு அறவிட வேண்டியது | உள்ளவாறு அறிடப்பட்டது | ஆண்டிற்கான நிலுவை | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | உள்ளவாறு அறவிடப்பட வேண்டியது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| தீர்வையுத் வரியும் | 97,995 | 70,328 | 27,667 | 60,045 | 90,718 | 74,306 |
| குத்தகை வாடகை | 18,594 | 15,761 | 2,833 | 6,837 | 18,520 | 17,376 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,023 | 948 | 75 | 307 | 1,002 | 18 |
| ஏனைய வருவாய் | 350,751 | 347,241 | 3,510 | 178,502 | 258,007 | 162,209 |
| | 468,363 | 434,278 | 34,085 | 245,691 | 368,247 | 253,909 |

### 2.3.2 தீர்வையும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 62,556,325 திரண்ட தீர்வை வரி நிலுவையில் மீளாய்வாண்டின்போது அறவிடப்பட்ட தொகை ரூபா 32,656,885 ஆகும். 48 சதவீதமான ரூபா 29,899,440 அறவிடப்படுவதானது தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கென பட்டியலிடப்பட்ட தீர்வை வரி வருவாய் ரூபா 81,979,717 ஆகும். ஆண்டின்போது அறவிடப்பட்டது ரூபா 54,311,924 மாத்திரமே. பட்டியலிடப்பட்ட வருவாயின் 44 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 22,667,793 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) தீர்வை வரி இலக்கம் உள்ளபோதும் அவ்வாறானதொரு சொத்து இல்லாதும் நகர சபைக்குச் சொந்தமல்லாத சொத்தாக இனங்காணப்பட்டிருந்த தீர்வை வரிக் கூறுகளுக்குரிய ரூபா 1,944,960 நிலுவையைப் பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் அதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சொத்துக்களை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிட்டு அதற்கேற்ப தீர்வை வரியை அறவிடாமையால் தீர்வை வரியைப் பட்டியலிடும்போது நேரடியாகக் காணக்கூடியவாறு அல்லாத சொத்துக்களுக்கும் பட்டியலிடப்பட்டிருந்தது.

(உ) 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வை வரி நிலுவை ரூபா 60,045,125 ஆகும். இதில் ரூபா 100,000 க்கு மேற்பட்ட பெறுமதியுடைய 12 தீர்வை வரிக் கூறுகளிலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வை வரி மீதி ரூபா 2,774,244 ஆகும்.

**2.3.3 குத்தகை வாடகை**

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாக 405 விற்பனைக் கூடங்களும் 08 விற்பனைக் கூடங்களுமாக மொத்தம் 413 விறபனைக் கூடங்கள் இருந்தன. 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 168 விற்பனைக் கூடங்களிலிருந்தும் 08 இறைச்சி விற்பனைக் கூடங்களிலிருந்தும் ரூபா 7,399,266 அறவிடப்படாதிருந்தது. இவற்றுள் 98 விற்பனைக் கூடங்களிலிருந்து 06 முதல் 85 மாத காலமாக ரூபா 7,170,073 கடை வாடகை நிலுவையாக இருந்தபோதும், வாடகை உடன்படிக்கையை இரத்துச் செய்து கடைகளை மீளப்பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருவாய் ரூபா 13,534,365 ஆகும். எவ்வாறாயினும், ஆண்டின்போது பெறப்பட்ட கடை வாடகை ரூபா 9,621,402 ஆகியமையால் 29 சதவீதமான ரூபா 3,912,963 ஆண்டின்போது பெறப்படவில்லை.

(இ) அறவிடுவதற்குத் தேவையான சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாது கடை வாடகை நிலுவையாகிய ரூபா 12,143,405 பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மஹரகம வாரச் சந்தையில் 37 கடைகள் மூடப்பட்டிருந்தன. இவற்றை மீளப் பெறுவதற்கு உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது 09 கடைகளுக்கும் நெடுங்காலமாகப் பட்டியல் வழங்கப்படாதிருந்தது.

(உ) குத்தகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட நாளிலிருந்து 05 ஆண்டுகள் கழிந்ததன் பின்னர் குத்தகை உடன்படிக்கையை புதுப்பிக்கும் உரிமை நகர சபைக்குள்ளபோதும், 10 ஆண்டுகள் கடந்தும் கடை வாடகையை மீளாய்வு செய்து உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) குத்தகைச் சொத்துக்களை உப குத்தகைக்கு வழங்குதல், பங்கு வியாபாரத்தில் ஈடுபடுதல் போன்ற அத்துமீறல் இடம்பெற்றுள்ளதா என்பதை இனங்காண்பதற்கு முறையான விதிமுறைகளை நகரசபை கடைப்பிடிக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குரிய 02 டிறக்டர்கள், 1 டிறெய்லர் என்பன ஹோமகம பிரதேச சபையால் மகரஹம நகர சபைக்கு 2002 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தபோதும், அவ்வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டுச் சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு டிறக்டர் தற்போது பழுதான நிலையில் உள்ளதுடன்,

நகரசபை அதன் உரித்தை பெறாததால் அதனை அப்புறப்படுத்த முடியாது பயனற்றிருந்தது.

(ஆ) விபத்துக்குள்ளான டிறெய்லர் நடப்பாண்டின் இறுதியிலும் பழுதுபார்க்கப்படாதிருந்தது. காப்புறுதி இழப்பீடாக வழங்குவதற்கு இனங்காணப்பட்ட தொகை ரூபா 20,000 ஆகும். இது 2017 யூன் 22 வரை பெறப்படாதிருந்தது.

**3.2 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது 137 அங்கத்தவர்கள் ரூபா 59,854 பெறுமதியான 231 நூலகப் புத்தகங்களை நூலகத்தில் ஒப்படைத்திருக்கவில்லை.

(ஆ) 1988 முதல் 2010 வரை மரணமடைந்த 14 உத்தியோகத்தர்களது கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 214,012 அறவிடப்படாதிருந்தது.

**3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மஹரகம வாரச்சந்தையின் சுற்றாடலைச் சுத்திகரிப்பதற்காக 2 தனியார் கம்பனிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைப் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான சுத்திகரிப்புக் கட்டணமாக ரூபா 4,258,358 வழங்கப்பட்டிருந்த போதும், அக்காலப்பகுதியின்போது சந்தை வரி வருவாயாக ரூபா 2,763,495 மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) ஆண்டு முழுவதும் கூறு விலையில் மாற்றமேற்படாதிருப்பதற்காக வழங்குனர்களை ஆரம்பத்திலேயே பதிவு செய்திராமையால் ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய கூறு விலைக்கு ஒப்பாக 2016 யூலை மாதத்தில் 3,000 மின்குமிழ்களைக் கொள்வனவு செய்கையில் ரூபா 435,000 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையான குறைந்த விலைக்கதிகமாக அதே நிறுவனத்திலிருந்து மின்சார உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 12,350 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்களது செயலாற்றல்**

(i) மீளாய்வாண்டில் நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ரூபா 295,710,779 பெறுமதியான 392 அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்கு ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. நிறைவேறிய 358 செயற்திட்டங்களுக்கும் நிறைவடையாத 16 செயற்திட்டங்களுக்கும் ரூபா 235,433,099 செலவிடப்பட்டிருந்தபோதும், 18 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(ii) நெடுஞ்சாலைகளையும் கழிவுநீர் வழிந்தோடும் பாதைகளையும் நிர்மாணித்தல், புதுப்பித்தல், பேணுதல் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டில் செலவு செய்யப்படாது எஞ்சிய தொகை 0.02 முதல் 100 சதவீதமாக இருந்தது.

(iii) வீதிப்பராமரிப்புக்கு விண்ணப்பிக்கப்பட்ட 18 சதவீதக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

**(ஆ) ஒப்பந்தத்தை வழங்குதல்**

---

நடப்பாண்டின்போது சபை வழங்கிய ஒப்பந்தங்களில் ஏறக்குறைய 98 சதவீதம் சமுதாய அமைப்புகளுக்கிடையே வழங்கப்பட்டனவாகும். அவற்றுள் ரூபா 10 முதல் 20 இலட்சம் வரையிலான பெறுமதியுடைய கட்டிடங்களை நிர்மாணித்தல், வீதிகளுக்கு காப்பட் பதித்தல், வீதி அபிவிருத்தி போன்ற 100 ஒப்பந்தங்கள் இருந்தன. எவ்வாறாயினும், அந்த அமைப்புகள் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.9.1 பிரிவின் பிரகாரம் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்ததற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(இ) பெப்பிலியான விளையாட்டு மைதான அபிவிருத்தி**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) பெப்பிலியான விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 7,000,000 மாகாண சபை நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியளவில் ரூபா 5,414,900 மதிப்பீட்டுத் தொகையில் அதனோடு தொடர்புடைய 4 ஒப்பந்தங்களும் சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மதிப்பீட்டுத் தொகை ரூபா 12,414,900 ஆகும். ரூபா 9,685,238 நடப்பாண்டு இறுதியளவில் செலவாகியிருந்தபோதும், அவ்விளையாட்டு மைதான அபிவிருத்தி நடவடிக்கைகள் மீளாய்வாண்டு இறுதிவரை நிறைவேறாதிருந்தன.

(ii) மூல மதிப்பீட்டை ரூபா 7,000,000 ஆகக்கொண்ட மதிப்பீட்டையும் திட்டத்தையும் தயாரிப்பதற்கு உசாத்துணை கம்பனி ஒன்றிற்கு ரூபா 227,430 வழங்கப்பட்டிருந்தது. அதன்போது, குறித்த பணி முடிவடையும் வரை அக்கம்பனியால் கண்காணிப்பும் ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டுமென இசைவு ஏற்பட்டிருந்தபோதும், அக்கம்பனி கண்காணிப்பில் ஈடுபடாததால் கடுவெல மாநகரசபைப் பொறியியலாளர் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

(iii) கட்டிட நிர்மாணத்திற்கான நிலத்தை பரிசீலித்து நிர்மாண வேலை முறைப்படி நடைபெறுவதற்குத் தேவையான மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு பதிலாக ரூபா 7,000,000 பெறுமதியுடைய மதிப்பீட்டைத் தயாரித்ததால் மதிப்பீட்டில் உள்ளடங்காத மேலதிக மற்றும் புறம்பான பணிகளுக்கு ரூபா 4,132,937 செலவிடப்பட வேண்டியேற்பட்டது.

(iv) மூல மதிப்பீட்டின் பிரகாரம் பழைய கூரையை அகற்றுவதற்கான கிரயம் ரூபா 50,000 ஆகியபோதும், விலைப்பட்டியலின் பிரகாரம் ரூபா 55,000 கொடுப்பனவு செய்யப்படாமையால் ரூபா 5,000 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.

(v) கட்டிட நிர்மாண வேலைக்கான மொத்த மதிப்பீட்டையும் ஒரே தடவையில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக ரூபா 12,414,900 தொகையுடைய மதிப்பீடு அவ்வவ்போது 5 பிரிவுகளாக 3 ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(vi) கூரையை பொருத்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூபா 1,499,900 ஆகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தகாரர்

சமர்ப்பித்திருந்த தொகை ரூபா 1,488,360 ஆகும். எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையை விட அதிகமாக ரூபா 11,540 மதிப்பீட்டிலான கூறுவிலைக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆவணங்களில் உள்ள கையெழுத்து டிபக்ஸ் மையினால் நீக்கப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vii) மூல மதிப்பீட்டின் பிரகாரம், கூரையை அகற்றி மீண்டும் பொருத்துவதற்கான செலவு ரூபா 672,485 ஆகும். புதிய மதிப்பீட்டின் பிரகாரம் 48.44 சதவீத அதிகரிப்புடன் அது ரூபா 1,488,360 அதிகரித்திருந்தது. அதனை வேலைக்குரிய விடயங்களாக பிரித்துக் காட்டாது ஒட்டுமொத்தப் பெறுமதி மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. மேலும், புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூரை 2016 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டின்போது பருவ மற்றும் காலநிலை மாற்றங்களால் கழன்றிருந்தது.

(viii) அலுமினியத்தாலான கதவு, யன்னல் என்பவற்றைப் பொருத்துவதற்கான ரூபா 1,300,000 பெறுமதியுடைய ஒப்பந்தம் வேலை ஒப்படைப்புக் குழு தீர்மானித்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படாது 2016 பெப்ரவரி 03 ஆந் திகதியன்று வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

**(ஈ) வாரச்சந்தை தேங்காய் விற்பனைக்கெனக் கடைகளை நிர்மாணித்தல்**

கடைகளை நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட பணிகளில் ரூபா 2,153,676 பெறுமதி உடைய 27 பணிகள் நிறைவேற்றப்பட்டிராததுடன், நிர்மாணிக்கப்பட்ட கடைகளிலும் குறைபாடுகள் நிலவின.

**(உ) நாவின்ன ஜயகத் வீதி சனசமூக நிலைய நிர்மாண வேலை**

நாவின்ன ஜயகத் வீதியிலுள்ள சனசமூக நிலையத்தின் ஒரு பகுதி 06 கட்டங்களின் கீழ் ரூபா 6,427,965 செலவில் பாடசாலையாக மாற்றஞ் செய்யப்பட்டு 2015 மார்ச் மாதத்தில் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தபோதும், கட்டிடம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், இக்கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணிக்காததால் கொங்கிறீட்டின் ஒரு பகுதி மழையில் நனைந்து சுவரில் நீர் வழிந்தோடி பாசி படர்ந்திருந்ததுடன், சுவரின் சில பகுதிகளில் வெடிப்பும் காணப்பட்டது.

**(ஊ) மஹரகம வாரச்சந்தையைச் சுத்திகரிப்பதும் சுகாதார வேலைகளை வழங்குதலும்**

மஹரகம வாரச் சந்தை வளாகத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றும் வேலை 2 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) ஒரு கம்பனியுடனான உடன்படிக்கை 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்தபோதும், அக்கம்பனி 2016 செப்டம்பர் 15 வரை சேவை வழங்கியமைக்காக ரூபா 2,894,436 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கால நீடிப்புக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம், மாதாந்தம் 13 தடவைகள் கழிவுப் பொருட்களைக் கொண்டு செல்ல வேண்டும். மேலதிக சேவைகளை வழங்குவதாயின், ஒரு தடவைக்கு ரூபா 6,000 வீதம் வழங்கப்பட வேண்டுமாயினும், மாதாந்தம் 13 தடவைகள் பணியாற்றியதற்குப் புறம்பாக 2016 சனவரி முதல் மே வரை 83

தடவைகளுக்கு ரூபா 507,922 தொகையானது 2016 டிசெம்பரில் மேலதிகமாக வழங்கப்பட்டதால் மாதாந்தம் 16 தடவைகள் கழிவுப் பொருட்கள் மேலதிகமாக் கொண்டு செல்லப்பட்டிருந்தன.

(iii) வாரச் சந்தை சுத்திகரிப்பு மற்றும் சுகாதார வேலைகளை வழங்குதல் என்பனவற்றிற்கு 2016 செப்டெம்பர் 15 முதல் 2017 செப்டெம்பர் 14 வரை வேறொரு கம்பனியுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, 13 தடவைகள் பயணஞ் செய்வதற்கு மாதாந்தம் ரூபா 214,000 வழங்கப்படுவதற்கான இணக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இச் சேவைகளை வழங்குவதற்காக மேலே (i) இல் குறிப்பிட்பட்ட முதலாவது கம்பனி டிப்பர் வாகனத்தைப் பயன்படுத்தியிருந்தது. இரண்டாவது கம்பனி டிறக்டர் மூலம் கழிவுப் பொருட்களை கொண்டு சென்றிருந்தது. உடன்படிக்கையில் கைச்சாத்திடும்போது, இவ்விரண்டு கம்பனிகளும் பயன்படுத்திய வாகனங்களின் மூலம் கொண்டு செல்லக்கூடிய கழிவுப் பொருட்களின் அளவு கருத்தில்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நூலகம் ஒன்றை அமைப்பது நோக்கமாகும் எனக் குறிப்பிட்டு 2016 ஆம் ஆண்டின்போது நகரசபை ரூபா 1,200,000 செலவில் கட்டிடமொன்றைக் கொள்வனவு செய்திருந்தபோதும், இக்கட்டிடத்தில் 2017 ஆம் ஆண்டு வரை நூலகம் ஒன்று அமைக்கப்படாது 11 ஆண்டுகளாக பயனற்றிருந்தது.

(ஆ) மஹரகம நகர சபைக்குரிய நெடுஞ்சாலைகள் தொடர்பாக பட்டோலை பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(இ) வாகனப் பதிவேட்டில் உள்ளடங்கிய 03 வாகனங்கள் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்படாததால் பொருள் மெய்மையாய்வு அறிக்கை சரியாக அமையவில்லை.

(ஈ) அநேக ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருக்கும் கையிருப்பைக் களஞ்சியத்திலிருந்து அப்புறப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன் ஜய்கா உதவியின் கீழ் பெறப்பட்ட 198 வகைப் பொருட்களும் இதில் உள்ளடங்கியிருந்தன.

(உ) 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் கராஜ், சுகாதாரப் பிரிவு, வீதிப் பிரிவு மஹரகம மற்றும் கொட்டாவ பொதுச் சந்தைகள் என்பவற்றினது பட்டோலைப் பொருட் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.6 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கழிவுப் பொருட்களை அகற்றுதல் தொடர்பாக கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை மற்றும் மஹரகம நகரசபை என்பன 2016 ஆகஸ்ட் 01 முதல் 2018 யூலை 31 வரையான காலப்பகுதிக்கு மேற்கொண்ட புதிய உடன்படிக்கையின் பிரகாரம், அதிகரிக்கப்பட்ட சேவைக் கட்டணம் 2016 மார்ச் முதல் யூன் வரையான

காலப்பகுதிக்கும் ஏற்புடையதாக்கப்பட்டதால் ரூபா 5,611,818 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென முறையான திட்டத்தை நகரசபை கொண்டிராததால் 2016 ஆம் ஆண்டின்போது நகர சபைக்குச் சொந்தமான பிரதேசத்தில் வெவ்வேறாக்கப்படும் கழிவுப்பொருளின் அளவு 1767 மெற்றிக் தொன் ஆகவும் வெவ்வேறாக்கப்படாத கழிவுப்பொருட்களின் அளவு 29912 மெற்றிக் தொன் ஆகவும் இருந்தன. மொத்தக் கழிவுப் பொருட்களின் 94 சதவீதம் கலவைக் கழிவுப் பொருட்களாக அகற்றப்பட்டிருந்தன. கழிவுப்பொருட்களைச் சேகரிப்பது முறையாக முகாமைத்துவமிடப்படாததால் கலவையாகக் காணப்படும் கழிவுப் பொருட்களின் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 22,434,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யவேண்டியேற்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஆண்டின்போது வருவாய் மற்றும் செலவின விடயங்களுக்கிடையே நிதியேற்பாடு மாற்றத்திற்குள்ளானதையடுத்து பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளவாறான வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே 4.63 சதவீதம் முதல் 77.65 சதவீதம் வரையில் வேறுபாடு நிலவிய 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூவமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட மூலதனப் பெறுவனவு ரூபா 107,002,000 ஆகியபோதும், உள்ளவாறான பெறுவனவு ரூபா 39,788,420 அல்லது 37.2 சதவீதமாக இருந்தது.

(இ) மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 53,434,500 ஆகிய 114 விடயங்களில் மீளாய்வாண்டின்போது செலவுகள் எதுவும் நிகழவில்லை.

(ஈ) மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 38,888,000 ஆகிய 11 வருவாய் விடயங்களின் கீழ் மீளாய்வாண்டின்போது வருவாய் எதுவும் சேகரிக்கப்படவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

வருடாந்த செயலாற்றல் அறிக்கை முறைப்படி தயாரிக்கப்படவில்லை.

**5.** **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) பாதீடு
(ஈ) நிலையான சொத்தும் கையிருப்புக் கட்டுப்பாடும்
(உ) கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஊ) உள்ளகக் கணக்காய்வு